**DEPOSITION OF WITNESS (Code of Civil Procedure)**
**IN THE COURT OF DISTRICT AND SESSIONS COURT,**

**COMMUNAL CLASH CASES, MADURAI**

**MCOP No. 2085/2021**

**மனுதாரர் தரப்பு சாட்சி - 1**

Name : முருகேசன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed by Thiru.Palanivel, Gr.I.Bench clerk of this court in accordance with the provision of Oaths Act of the day of 26.07.2023

**முதல் விசாரணை**

நான் மனுவில் 1 வது சாட்சி ஆவேன். இந்த வழக்கு சம்மந்தமாக விவரங்களை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை நேரில் அறிந்து கையெழுத்திட்டுள்ளேன். அதற்கு ஆதரவாக ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | இறந்தவரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.3 | பிரேத பரிசோதனை நகல் |
| ம.சா.ஆ.4 | இறப்பு சான்றிதழ்நகல் |
| ம.சா.ஆ.5 | 1-2 மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை நகல்கள் |
| ம.சா.ஆ.6 | 1-2 மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தக நகல்கள் |
| ம.சா.ஆ.7 | இறந்த எனது மகன் மதுரை இன்ஸ்டிடியூட் ஆப் இன்சினியரிங் அன்ட் டெக்னாலஜி கல்லூாரியில் சிவில் இன்சினியரிங் படித்துள்ளதை காட்டும் மதிப்பெண்சான்றிதழ் |
| ம.சா.ஆ.8 | எனது மகன் கல்லூரியின் படித்தபோது 31.01.2019 ல் கட்டியுள்ள டியூசன் பீஸ் ரூ.3,500/-க்குரிய ரசீது நகல் |

மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு மனுவில் கோரியுள்ள படி இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டுகிறேன்.

<u>1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் கூறிய விபரங்கள் அடிப்படையில் தான் மனுவும், முதல் விசாரணை வாக்குமூலமும் தயாரிக்கப்பட்டது. இருசக்கரவாகனம் ஓட்டிவந்த 1 ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 ம் எதிர்மனுதாரர் மேற்கில் இருநது தெற்கு நோக்கி வந்தார். லாரி கிழக்கில் இருநது மேற்கு நோக்கி சென்றது. லாரி திடீரென சாலையின் மறு பகுதியை அடைந்ததால் தான் விபத்து ஏற்பட்டது. லாரி ஓட்டுநர்தான் விபத்துக்கு காரணமாவார். லாரி ஓட்டுநர் மீதுதான் வாடிப்பட்டி காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இருசக்கரவாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியும். 1 ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. லாரி உரிமையாளரும், காப்பீட்டு நிறுவனமும் இழப்பீடு செலுத்தவேண்டும் என்றால் சரிதான்.

<u>2 ம் எதிர்மனுதாரர்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மனுவில் 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் விபத்துக்கு காரணம் என நான் முதல்விசாரணை வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். அசல்மனுவிலும் லாரி உரிமையாளரும், காப்பீட்டு நிறுவனமும் இழப்பீடு செலுத்தவேண்டும் என கூறியிருக்கிறேன் என்றால்ச ரிதான். இருசக்கரவவாகனத்திற்கான காப்பீட்டு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இருசக்கரவவாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி தெரியாது. அவ்வாறு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்குவது காப்பீட்டு ஒப்பந்த விதிகளுக்கு மாறானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முதல்விசாரணை வாக்குமூலத்திலும் லாரி உரிமையாளரும் , காப்பீட்டு நிறுவனமும் தான் இழப்பீடு செலுத்தவேண்டும் என கூறியிருக்கிறேன்.

**<u>4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்துசம்பந்தமாக லாரியின் காப்பீட்டு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவிலும் காப்பீடு சம்பந்தமாக எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். விபத்து தேதியன்று 3 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் 4 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்றும் எனவே 4 ம் எதிர்மனுதாரர் அவசியமற்ற தரப்பினர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 4 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.